

அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரெயில் நிலையம் அருகில் புதுப்பிக்கப் பட்ட சுரங்கப்பாதை பயணிகள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டு இருப்பதை படத்தில் காணலாம்.

### அண்ணாசாலையில் உள்ள

# அரசினர் தோட்டம் சுரங்கப்பாதை புதுபொலிவுடன் திறப்பு

## முறையாக பராமரிக்க பொதுமக்கள் கோரிக்கை

சென்னை, செப்.17– அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரெயில் சுரங்க ரெயில் நிலையம் அருகில் உள்ள சுரங்கப் பாதை சிரமைக்கப்பட்டு புதுபொலிவுடன் பொது மக்கள் பயன்பாட்டுக்காக திறக்கப்பட்டு உள்ளது.

### அண்ணாசாலை சுரங்கப்பாதை

சென்னை அண்ணாசாலையில் அரசினர் தோட்டம் சுரங்கப்பாதை மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பழைய அண்ணா சுரங்கப்பாதை நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டு பொது மக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டு உள்ளது. சென்னையின் மிகப்பெரிய சுரங்கப் பாதையில் ஒன்றான பழைய அண்ணா சுரங்கப்பாதை அண்ணா சாலையில் உள்ள அறிஞர் அண்ணா சிலைக்கு கீழே அமைந்து உள்ளது.

இப்போது உள்ள மெட்ரோ ரெயில் நிலைய நுழைவு கட்டமைப்புகளில் இருப்பது போன்று அழகிய கிரானைட் தளம், டைல்ஸ் கற்கள் பதிக்கப் பட்ட சுவர்கள், புதிய விளக்குகளுடன் சுரங்கப்பாதை புதுப் பிக்கப்பட்டு உள்ளது. அரசினர் தோட்டம் மெட்ரோ ரெயில் நிலைய பொதுத்தளத் திற்கு சுரங்கப்பாதை நேரடியாக இணைக்கப்பட்டு உள்ளது. வாலாஜா சாலை, எல்லீஸ் சாலை, பிளாக்கர்ஸ் சாலை மற்றும் அண்ணா சாலை ஆகிய இடங்களில் இருந்து பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகள் இந்த சுரங்கப்பாதையை பயன்படுத்தி மெட்ரோ ரெயில் பயணிப்பதுடன் சாலையை எளிதில் கடக்கலாம்.

### அறிவிப்பு பலகைகள்

காதிபவன் மற்றும் ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தி லுள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஆகியவற்றையும் இந்த அண்ணா சுரங்கப்பாதை இணைக்கிறது.

மெட்ரோ ரெயில் நிலையத் திற்கு பயணிகளை வழிநடத்த அண்ணா சுரங்கப்பாதையின் நுழைவு வாயில் மற்றும் நடைப் பாதைகளிலும் அறிவிப்பு பலகைகளும் வைக்கப்பட்டு உள்ளன.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

'பயணிகள் வசதிக்காக சிரமைக்கப்பட்டு திறக்கப்பட்ட சுரங்கப்பாதையை சம்பந்தப் பட்ட துறையினர் நடைபாதை ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் சுவரொட்டிகள் ஒட்டுபவர்களிடம் காத்து முறையாக பராமரிக்க வேண்டும்' என்பது பொதுமக்களின் கோரிக்கையாக உள்ளது.